International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 01 January to March 2020 www.irjtsjournal.org

# நற்றிணைப் பாடல்கள் கூறும் நிலையாமை

ஷா. முஹம்மது அஸ்ரின்,
*முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு (UGC-JRF),*
***முதுகலைத் தமிழாய்வுத்துறை,***
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 20.

**முன்னுரை:**

சங்க இலக்கியப் பாடல்கள் வாயிலாகச் சங்க கால மக்களின் வாழ்க்கை முறையை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களுள் ஒன்றாக விளங்கும் நற்றிணை, தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையைக் காட்டும் நானூறு அகப்பாடல்களைக் கொண்ட தொகை நூலாகும். மேலும், அக்கால மக்களின் உணவு, நம்பிக்கை, தொழில், வழிபாடு போன்ற பல தகவல்களைக் கொண்டு, தொகை நூல்கள் வரிசையில் முதலாவதாகவும் திகழ்கிறது. செல்வமும் இளமையும் வாழ்வில் நிலைத்து நிற்காது என உலக மக்களுக்குச் சங்ககாலப் புலவர்களின் பாடல்கள் அறிவுறுத்துகின்றன. அவ்வகையில் நற்றிணைப் புலவர்கள் கூறும் மனித வாழ்க்கையில் நிலைபேறில்லாத செல்வத்தையும், முதுமையை அடையும் இளமையையும் '**நிலையாமை**' என்ற தலைப்பின்கீழ் இக்கட்டுரையானது ஆராய முனைகிறது.

**நிலையாமை – விளக்கம் :**

நிலையாமை என்ற சொல்லுக்கு "**உடலை விட்டு உயிர் பிரிந்த பின் ஆன்மாவுக்குத் துணையாக வராத உலக வாழ்விற்கு மனிதனுக்குத் துணைநின்ற பொருள்கள்**" என்று பொருள் கொள்ளலாம். நிலையில்லாத உலகின்மீது கொண்டுள்ள பற்றை விடுத்து வீடுபேறு அடையுமாறு மன்னனுக்கு அறிவுரைக் கூறும் வகையில் பாடுவது '**காஞ்சித் திணை**' ஆகும். இதனை,

**"நில்லா வுலகம் புல்லிய நெறித்தே"**

**(தொல்.பொருள்.76:3)**

எனத் தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. காஞ்சித் திணைக்குரிய 20 துறைகளைக் கூறும் தொல்காப்பியர், அவற்றுள் நிலையில்லாத வாழ்வின் இயல்பினை இளைஞர்களுக்கு, வயதின் மூத்த சான்றோர் எடுத்துக் கூறுவதாகப் பாடுவது '**முதுகாஞ்சி**' எனக் கூறுகிறார்.

**"கழிந்தோ ரொழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்"**

**(தொல்.பொருள்.77:2)**

மேற்கூறிய இரு தொல்காப்பிய நூற்பாக்கள் வாயிலாகத் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நிலையாமையை உலகிற்கு எடுத்துக்கூறியது புலனாகிறது.

**இளமை நிலையாமை:**

மலை, காடு, கடல், சுரம் ஆகிய நிலங்களைக் கடந்துப் பொருள் தேடி வாழ்க்கையை நடத்தக் கூடியவராகச் சங்ககாலத் தமிழர்கள் திகழ்ந்துள்ளனர். தலைவியின் மேல் தீராத காதல் கொண்ட தலைவன், இன்பத்தைத் தரக்கூடிய இளமை வயதில் தலைவியை பிரிந்துப் பொருள் தேடிச் செல்வதாக அமைந்த,

**"நாளது சின்மையும் இளமையது அருமையும்"**

**(தொல்.பொருள்.44:7)**

என்பது தலைவனின் 24 கூற்றுகளுள் ஒன்றாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

மனிதர்களின் வயதைப் பொருத்து உடலிலும் உடல் உறுப்புகளிலும் மாற்றங்கள் நிகழும். இந்த மாற்றமே, ஒரு மனிதனை இளையவன், முதியவன் எனப் பிரித்துக் காட்டும். இளமை மறைந்தாலும் தலைவியோடு வாழ வேண்டும் எனத் தலைவனுக்கு அறிவுறுத்துவதாக தோழியின் கூற்றுப் பாடல்கள் அமைந்தள்ளன.

**"அண்ணாந்து ஏந்துய வன்முலை தளரினும்
பொன்நேர் மேனி மணியின் தாழ்ந்த
நல்நெடுங் கூந்தல் நரையோடு முடிப்பினும்"**

**(நற்றிணை.10: 1-3)**

**"இளமை தீர்ந்தனள் இவளென ..........."**

**(நற்றிணை.351: 1)**

தலைவியின் கொங்கைகள் தளர்ந்தாலும், தலைமுடிகளும் நரைத்தாலும் முன்பிருந்த இளமை இப்போது இல்லையே! எனக் காரணம் கூறி நம்பி வந்தவளைக் கைவிடாது வாழ வேண்டும் என்கிறாள். வயதின் முதிர்ச்சியால் இளம்பெண்களின் கொங்கைகள் தளர்வதும், தலைமுடிகள் நரைப்படுதலும் இளமை நிலையில்லாத தன்மையுடையது என்பதை சுட்டிக்காட்டுகிறது.

**"முரிந்த சிலம்பின் நெரிந்த வள்ளியின்
புறனழிந்து ஒலிவரும் தாழிருங் கூந்தல்
ஆயமும் அழுங்கின்று ............ ..............."**

**(நற்றிணை.295: 1-3)**

**"கலிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்
இளநலம் இற்கடை ஒழியச்
சேறும் .......... .......... .......... "**

**(நற்றிணை.295: 7-9)**

என்ற ஔவையாரின் பாடலடிகள் இளமையை இழந்த தலைவியின் உள்ளக் குமுறலைக் கண்முன் காட்சிப்படுத்துகிறது.

மற்றொரு தோழி கூட்டாக அமைந்த பாடலில், இளமையை அம்பின் நிழலோடு உவமித்துப் பாடப்பட்டுள்ளது. இலக்கை நோக்கி விடப்படும் அம்பு நொடிப் பொழுதில் அவ்விலக்கைத் தைக்கும். ஆனால், அம்பைக் காட்டிலும் அதனின் நிழல் விரைவாகவே இலக்கைத் தைத்திடும். ஆகவே,

**“வைகல்தோறும் இன்பமும் இளமையும்**
**எய்கணை நிழலின் கழியும் .................”**

**(நற்றிணை.46: 1-2)**

என்ற பாடல் இளமை என்பது அம்பின் நிழல் போல விரைவில் இலக்கை ((முதுமையை) அடைந்துவிடுவதாக அறிவுறுத்துகிறது.

மனிதனின் வாழ்வை பிறப்பு, இளமை, முதுமை, இறப்பு என்ற நான்கு நிலைகளாகப் பிரித்துவிடலாம். ஒரு நிலையைக் கடந்து அடுத்த நிலைக்குச் சென்ற மனிதனால், மீண்டும் முன்பிருந்த நிலைக்குத் திரும்பவோ அல்லது அடுத்த நிலைக்குச் செல்லாமலோ இருக்க முடியாது. இது இயற்கையின் நீதியாகும். இதனை,

**“முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்”**

**(நற்றிணை.314: 1)**

என்ற முப்பேர் நாகனாரின் தலைவி கூற்றாக அமைந்த பாடல் விளக்குகிறது.

**செல்வம் நிலையாமை:**

செல்வம் என்பது வாழ்க்கையை சிறப்பான முறையில் வாழ்வதற்குத் தவிர்க்க முடியாத ஒன்றாக விளங்குகிறது. ஆனால், செல்வத்தின் சிறப்புக் கருதி அதனை தேடிச் செல்லக் கூடியவர்களிடம் இளமை இருப்பதில்லை. இளமை உடையவர்களிடம் செல்வம் இருப்பதில்லை, அவ்வாறு இருந்தாலும் நிலைத்து நிற்பதில்லை. இதனாலயே, நற்றிணை நிலையில்லாத பொருள் **“நில்லாப் பொருட்பிணி” (நற்றிணை.126: 11)**, **“நில்லாப் பொருட்பிணி” (நற்றிணை.241: 12)** என்றும், அழிந்துபோகக்கூடிய பொருள் **“மன்னாப் பொருட்பிணி” (நற்றிணை.46: 11)**, **“மன்னாப் பொருட்பிணி” (நற்றிணை.71: 1)** என்றும் கூறுகிறது.

**“.......... ............ ............ பொருளே,**
**வாடாப் பூவின் பொய்கை நாப்பண்**
**ஓடுமீன் வழியின் கெடுவ”**

**(நற்றிணை.16: 4-6)**

என்ற பாடலில் செல்வத்தை பொய்கையில் ஓடும் மீனுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. வாழ்க்கை என்பது பொய்கை போன்றது. நீர் இருக்கும்வரை பொய்கை ஓடுவது போல உயிர் இருக்கும் வரை வாழ்க்கை

ஓடிக் கொண்டே இருக்கும். அதில் ஓடும் மீனைப் போன்றது தான் செல்வம். மீன் எப்படி தண்ணீரில் வலைந்து நெழிந்து சென்று மறையுமோ அதுபோல செல்வமும் வாழ்வில் தோன்றி மறைந்துவிடும்.

**இளமையும் வளமையும்:**

இளமையும் செல்வமும் வாழ்வில் நிலைத்திருக்காது என்ற கருத்தை நற்றிணைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. வாழ்வில் இன்பத்தை அனுபவிக்க செல்வமும் இளமையும் இன்றியமையாதவை என்பதையும் கூறுகிறது. திருமணம் முடிந்த பிறகு பல ஆண்கள் பொருட் செல்வத்தைத் தேடிப் பறந்து செல்கின்றனர். இத்தகையோருக்கு அறிவுருத்தும் விதமாக,

**“இறந்துசெய் பொருளும் இன்பம்தரும் எனின்**
**இளமையின் சிறந்த வளமையும் இல்லை**
**இளமை கழிந்த பின்றை, வளமை**
**காமம் தருதலும் இன்றே ……………..”**

**(நற்றிணை.126: 7-10)**

செல்வம் இல்லாமல்கூட இளமை வயதைக் கொண்டு இன்பம் பெறமுடியும். ஆனால், கடல் கடந்து செல்வத்தைப் பெற்றும் இளமையை தொலைந்துவிட்டால் இன்பத்தைப் பெறமுடியாது. எனவே, இன்பத்தை அனுபவிக்க செல்வத்தைக் காட்டிலும் இளமையே முக்கியமானதாகும்.

**முடிவுரை :**

நற்றிணையில் கூறப்பட்டுள்ள இருவகை (செல்வம், இளமை) நிலையாமைகளும் பிரிதலும் பிரிதல் நிமித்தத்தை உரிப்பொருளாகக் கொண்ட பாலைத் திணைப் பாடல்களிலேயே பெரும்பாலும் காணப்படுகிறது. தலைவி மற்றும் தோழியின் கூற்றாக அமைந்த பாடல்கள் நிலையாமையை தலைவனுக்கு அறிவுறுத்துவதாகவும், தலைவனின் கூற்றாக அமைந்த பாடல்கள் தன்னுடைய நெஞ்சுக்கு அறிவுறுத்துவதாகவும் அமைந்துள்ளன. அம்பின் நிழலோடு இளமையையும், ஓடுகின்ற மீனோடு செல்வத்தையும் உவமித்துப் பாடப்பட்டுள்ள பாடல்கள் நிலையாமைக் கருத்தை எளிய முறையில் விளக்குகின்றன. இன்றைய உலகில் நிலையில்லாத செல்வத்தைப் பெறுவதற்கே பல குற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இளமைக் காலத்தையும் தவறான வழிகளில் செலவிட்டு பின்னாட்களில் வருந்துகின்றனர். இவர்களுக்கு அறிவுரைப் பகர்வதாக நற்றிணைப் பாடல்கள் அமைகின்றன.

**பயன்பட்ட நூல்கள்:**

[1] இராமையா பிள்ளை. நா (**உ.ஆ**), நற்றிணை மூலமும் உரையும், வர்த்தமான் பதிப்பகம், சென்னை, 1999.

[2] புலியூர்க் கேசிகன் (**உ.ஆ**), நற்றிணைத் தெளிவுரை பகுதி 1 & 2, பாரி நிலையம், சென்னை, 2001.

[3] பவானந்தம்பிள்ளை. ச (**தொ.ஆ**), தற்கால தமிழ்ச்சொல்லகராதி, மாக்மில்லன் & கம்பெனி லிமிடெட், சென்னை, 1925.

[4] திருஞானசம்பந்தம். ச (**உ.ஆ**), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.